பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 31 புதன்கிழமை 15.06.2022 கதிர் 113

## விடுமுறை சுற்றறிக்கை இன்றிரவு வெளியாகும்



எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்த வாரம் முதல் பிரதி வெள்ளிக்கிழமைகளில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய அரச அலுவலகங்களுக்கு விடுமுறையை அறிவிப்பதற்கான சுற்றறிக்கை இன்றிரவு வெளியிடப்படவுள்ளது.

☞ 2

# பிரச்சினைக்குத் தீர்வு காண ஆட்சி மாற்றம் மிக அவசியம்



## சம்பந்தன் திட்டவட்டம்

நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் ஆட்சி மாற்றம் மிகவும் அவசியம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் வலியுறுத்தினார்.

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களுக்கு இன்று வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

☞ 2

## மக்களின் பிரச்சினைக்கே முதலில் தீர்வு வேண்டும்

### '21' தொடர்பில் மஹிந்த கருத்து

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் கொண்டுவரப்படுவதற்கு முன்னர் நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கி நாடாளுமன்றத்தைப் பலப்படுத்தும் யோசனை 21ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டால் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அதற்கு ஆதரவளிக்கும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

☞ 2



## நாட்டை ஆள முடியாவிட்டால் பதவியிலிருந்து விலகுங்கள்

### பேராயர் வலியுறுத்து

நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாத ஆட்சியாளர்கள், பதவிகளில் நீடிக்காது, அதிலிருந்து விலக வேண்டும் - என்று பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக்குவோம் என்றனர். இன்று யாசகம் பெறும் நிலையில் உள்ளோம். சுபீட்சத்தின் நோக்கு என்றார்கள், சுபீட்



சம் எங்கே என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மக்களுக்குச் சேவையாற்றவே

☞ 2

## மட்டக்களப்பில் மின்சாரம் தாக்கி நான்கு பிள்ளைகளின் தாய் சாவு



மின்சாரம்தாக்கிக்குடும்பப்பெண்ணொருவர் மரணமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை துறையடி வீதியைச் சேர்ந்த 51வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயான அஹமது உசனார் லத்தீபா உம்மா என்பவரே இன்று காலை 5.30 மணியளவில் இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

வீட்டின் முன்பகுதியில் அமைந்திருந்த தகரக் கொட்டிலுக்கு மேலாகச் சென்ற மின்சார இணைப்பில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாக இந்த மரணம்

☞ 2

## மக்களின் நம்பிக்கையைச் சிதைத்த கோட்டாபய பதவி விலக வேண்டும்!

### பஸிலின் சகாவான ரஞ்சித் இடித்துரைப்பு



நாட்டு மக்களின் நம்பிக்கையைச் சிதைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கிய உறுப்பினரும் வடமத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சருமான எஸ்.எம். ரஞ்சித் வலியுறுத்தியுள்ளார்.

பஸில் ராஜபக்ஷவின் சகாவான நாடாளுமன்ற உறுப்பினர்

☞ 2

## சொத்துக்காக மாமியாரை கொலைசெய்த மருமகன்

கொழும்பு, வத்தளை - மஹா பாகே, கல் உடுபிட்ட பிரதேசத்தில் வீடொன்றில் படுகொலை செய்யப்பட்ட 74 வயதுடைய பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மரணத்தின் பிரதான சந்தேகநபர் அவரது ஒரே மகளின் கணவர் என மஹாபாகே பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த 7ஆம் திகதி அதிகாலை 1 மணிக்கும் 5 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் அலுமாரியில் இருந்த பொருள்களைத் திருடினர் என்றும், சம்பவத்தை நேரில் பார்த்த பெண்ணைக் கொன்றுவிட்டு

☞ 2

## மக்கள் குரலுக்குச் செவிசாய்க்குக!

### எம்.பிக்களை வலியுறுத்தி ஒரு இலட்சம் கையெழுத்து

சுமார் ஓர் இலட்சம் பேரின் கையெழுத்துடன் மக்களின் குரலுக்குச் செவிசாய்க்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கோரும் கையெழுத்துச் சேகரிப்பு இடம்பெற்று வருகின்றது என அதன் செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மக்களின் குரலுக்குச் செவிசாய்க்குமாறு கோரும் அந்தக் கோரிக்கை மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை மக்களின் சமூக அரசியல் பொருளாதார வாழ்வு முற்றாக செயலிழந்து ஓர் அவல நிலைக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம். கடந்த இரண்டு வருடங்களாக நிலவிய ஊழல் முற்றிலும் தவறான முகாமைத்துவம் மற்றும் எதேச்சதிகாரமான ஆட்சி முறைமை என்பனவே நாட்டை இந்தளவு வங்குரோத்து நிலைமைக்குத்

☞ 2



## சொத்துக்காக மாமியாரை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பிச் சென்றனர் என்றும் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் உயிரிழந்த பெண்ணின் மருமகனின் நடத்தை மற்றும் நடவடிக்கைகளில் பொலிஸாருக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் பேரில் அவரைக் கைது செய்தனர். கைதுசெய்யப்பட்டவரிடம் பொலிஸார் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளின்போது சம்பவம் தொடர்பான விவரங்கள் வெளியாகியுள்ளன.

சுகயீனம் காரணமாக தனது மனைவி வத்தளையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தபோது கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள சந்தேகநபர் திட்டமிட்டுள்ளார்.

அதற்கமைய, சொத்துக்களைச் சொந்தமாக்கிக் கொள்வதற்காக மாமியாரைக் கொலை செய்தார் என்று சந்தேக நபர் வாக்குமூலம் அளித்துள்ளார். 40 கோடி ரூபாவுக்கான நிலையான வைப்புச் சான்றிதழ், காணி உறுதிப் பத்திரங்கள், உயிரிழந்த பெண்ணின் தங்க நகை, பணம் உட்பட ஆவணங்கள் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

மேலும், ராகம பொது வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில், கழுத்து நெரிக்கப்பட்டதால் மரணம் ஏற்பட்டுள்ளது என உறுதி செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர் வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு மஹர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## மக்கள் குரலுக்குச் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தள்ளியுள்ளன. இது உயிர், உடமை அழிவுகள், மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத துன்பத்துக்கு வழிவகுத்துள்ளதோடு சமூகமற்றும்அரசியல்நெருக்கடியையும் தோற்றுவித்துள்ளது.

கோட்டபாய ராஜபக்ஷவுடன் மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்கிரம சிங்கவும் இணைந்து ஆட்சியை முன்கொண்டு செல்ல வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் ஒருபோதும் கோரவில்லை என்பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் இலங்கை மக்களால் தமது பிரிதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்ட அரச மற்றும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்வரும் விடயங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று இதன் கீழ்க் கையொப்பமிடும் இலங்கை மக்களாகிய நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதன் மூலமே அரச முறைமையில் முறைசார் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதைக் கவனத்தில்கொள்ளல் வேண்டும்.

ஜனாதிபதி கோட்டபாய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமை வகிக்கும் தற்போதைய அரசு நாடு தற்போது அனுபவிக்கும் வங்குரோத்து நிலைமைக்கு இட்டுச் சென்ற ஒரு தோல்வியடைந்த அரசு என ஏற்றுக்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்த அரசைப் பதவியில் நீடிக்கும் எந்தவித ஆதரைவயும் வழங்கக்கூடாது.

இந்தக் கோரிக்கையை முன்கொண்டு செல்லும் வகையில் முன்னெடுத்துள்ள மக்கள் தலைமையிலான எந்தவொரு போராட்டத்தையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரிபுபடுத்த முயற்சி மேற்கொள்ளக்கூடாது.

தற்போதைய நெருக்கடியைச் சமாளிக்க அனைத்துக் கட்சி அரசு ஒன்றை உருவாக்க வேண்டும். அத்தோடு அடுத்த தேர்தலுக்கான காலவரையறையை அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து தீர்மானிக்க வேண்டும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதும் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறும் வகையில் காணப்படும் பிரதம மந்திரியின் தலைமையில் அமைச்சரவைக்கு ஆட்சி அதிகாரம் வழங்கும் 21ஆவது சீர்திருத்தச் சட்டம் தேவையான எந்தவொரு திருத்தத்துடனும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது அத்திருத்தம் நிறைவேற்றப்படுவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும் - என்றுள்ளது.

## மட்டக்களப்பில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ந்துள்ளது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மரணமடைந்த பெண்ணின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மக்களின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.எம். சந்திரசேனவின் சகோதரரே இவர். எஸ்.எம். சந்திரசேனவுக்கு இம்முறை அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அநுராதபுரத்தில் ஊடக சந்திப்பொன்றை நடத்திய எஸ்.எம். ரஞ்சித்,

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சியால்தான் ஜனாதிபதி வெற்றிபெற்றார். எனினும், அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் நாளுக்கு நாள் மக்களின் நம்பிக்கையை அவர் சிதைக்க ஆரம்பித்தார். இதுவே தற்போதைய குழப்பமான நிலைமைகளுக்குக் காரணம்.

69 இலட்சம் வாக்குகள் கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கிடைத்ததாகச் சிலர் கூறுகின்றனர். அவ்வாறு இல்லை. உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது இவர்கள் எவரும் இருக்கவில்லை. அர்ப்பணிப்பால் வெற்றி பெற்றோம்.

நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றவரின் தூரநோக்கற்ற செயற்பாடுகள் காரணமாக தற்போது நாட்டில் பொருளாதார, அரசியல் ஸ்திரமின்மை ஏற்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிரதமர் பதவியை வழங்கியமை தான் எடுத்த சிறந்த முடிவு என ஜனாதிபதி நினைப்பார் என்றால், அதுவும் விவசாயிகளுக்கு உரத்தை வழங்காது நாட்டுக்கு ஏற்பட்ட அழிவைப் போன்றதாகவே இருக்கும்.

தற்போது அனைத்து அரசியல் கட்சிகளும் வலுவிழந்துவிட்டன. போராட்டக்காரர்கள் கூறுவது தவறு என்ற நிலைப்பாட்டில் நாங்கள் ஆரம்பத்தில் இருந்தோம். போராட்டக்காரர்கள் கூறுவது சரி என்பது தற்போது எமக்குப் புரிகின்றது - என்றார்.

## மக்களின் பிரச்சினைக்கே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனதுகட்சிஉறுப்பினர்களகுழுவுடனான கலந்துரையாடலின்போதே மஹிந்த ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் சிங்கள ஊடகம் ஒன்றிடம் கூறினார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக மாறியதைத் தொடர்ந்து ஜனாதிபதி மற்றும் பிரதமர் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி மக்கள் போராட்டம் வெடித்தது.

ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை என்பன பொதுமக்களால் முற்றுகையிடப்பட்டு மிகவும் அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், கடந்த மே மாதம் 9ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து நாடு முழுவதும் வன்முறை வெடித்தது. இதில் 10 பேர் கொல்லப்பட்டதுடன், 300 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். இந்த வன்முறை வெடித்த தினமான மே 9ஆம் திகதி பிரதமர் பதவியை மஹிந்த ராஜபக்ஷ இராஜிநாமா செய்திருந்தார்.

## நாட்டை ஆள .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரம் வழங்கப்படுகின்றது. அந்த அதிகாரத்தை மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடாது. மக்களுக்குச் சேவையாற்ற முடியாவிட்டால் விலகுவதே சிறந்த செயலாக அமையும்.

மே 09 ஆம் திகதி சம்பவத்தை அனுமதிக்கமாட்டோம். கொலைகள் மற்றும் வன்முறைகளைக் கண்டிக்கின்றோம். ஆனால், அந்த வன்முறை எங்கிருந்து ஆரம்பமானது என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும் - என்றார்.

## விடுமுறை சுற்றறிக்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச சேவைகள், உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சுக்களின் செயலாளர்களுடன் பேச்சு நடைபெறுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமைகளில் அத்தியாவசிய அரச சேவைகள் தவிர்ந்த ஏனைய அரச நிறுவனங்களுக்கு விடுமுறை வழங்க நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

அதேநேரம், சிரேஷ்டத்துவம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அரச சேவையாளர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக அனுப்புவதற்கான ஏற்பாடுகளில் திருத்தங்களை அறிவிக்கும் சுற்றறிக்கையும் இன்றிரவு வெளியிடப்படவுள்ளது

இதற்கும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டது.

கல்வி அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அரச உத்தியோகத்தர் ஒருவர் தனது பணிக்காலத்தில் உயர்ந்தபட்சம் 5 வருடங்கள் சம்பளமற்ற விடுறையைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போது ஏற்பாடுகளின் பிரகாரம் இயலுமை உள்ளது.

ஆனாலும், குறித்த காலப்பகுதியில் ஓய்வூதியக் கணிப்பைக் கருத்தில்கொள்ளாமை, சிரேஷ்டத்துவத்தைப் பாதிக்கின்றமை மற்றும் ஏனைய நிபந்தனைகளால் அரச உத்தியோகத்தர்கள் அவ்வாறான விடுமுறையைப் பெறுவதில் ஆர்வம் காட்டுவதில்லை.

இதனைக் கருத்தில்கொண்டு, குறித்த ஏற்பாடுகளில் திருத்தங்களை மேற்கொண்டு இன்றிரவு சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது என அரச சேவைகள், உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே. மாயாதுன்னே மேலும் கூறியுள்ளார்.

## பிரச்சினைக்குத் தீர்வு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் தற்போதைய அரசியல், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டுமெனில் ஆட்சி மாற்றம் மிகவும் அவசியம். இது மக்களின் பிரதான வேண்டுகோளாக இருக்கின்றது.

ஏனெனில், இந்த அரசின் மீது மக்கள் நம்பிக்கையை முழுமையாக இழந்துவிட்டார்கள் என்று நான் கருதுகின்றேன்.

நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் நிச்சயமாக அரசில் மாற்றம் ஏற்பட வேண்டும். தற்போதைய அரசால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. அது வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது.

நாட்டினதும் மக்களினதும் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் திடசங்கற்பத்துடன் செயற்பட்டு ஒருமித்த தீர்மானங்களை எடுத்தால்தான் ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

சர்வதேச சமூகமும் இந்தக் கருமத்தில் அக்கறை காட்டும் என்று நான் நம்புகின்றேன்.

ஏனெனில் தற்போதைய ஆட்சியில் ஒரு மாற்றம் ஏற்பட்டால்தான் சர்வதேச சமூகத்துக்கு எமது நாட்டின் மீது ஒரு நம்பிக்கை ஏற்படும். சர்வதேச சமூகம் சகல வழிகளிலும் எமது நாட்டுக்கு உதவிகளையும் வழங்கும்.

அவ்விதமான ஓர் ஆட்சி மாற்றம் இல்லாமல் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வது மிகவும் கஷ்டமான விடயம் - என்றார்.




| மணமகன் விபரம் | மணமகன் விபரம் |
| --- | --- |
| பிறந்த திகதி : 10.06.1987<br>ஜாதி: V ஆண்<br>மதம் : இந்து<br>கல்வி தகைமை : Msc Engineer<br>எதிர்பார்ப்பு : கனடா அல்லது அவுஸ்திரேலியா மணமகள் | பிறந்த திகதி : 27.12. 1989<br>மதம் : இந்து<br>ஜாதி : V பெண் செவ்வாய் குற்றமுடையவர்<br>கல்வி தகைமை : MBA<br>தொழில்: கனடா பிரஜை<br>எதிர்பார்ப்பு : கனடா மணமகன் |
| பிறந்த திகதி : 26.09.1990<br>ஜாதி: N ஆண்<br>மதம் :இந்து<br>நட்சத்திரம் : திருவோணம் 2 ல் செவ்வாய்<br>கல்வி தகைமை : Bsc தொழில் : அரச உத்தியோகத்தா<br>எதிர்பார்ப்பு : அழகான மணமகள் | பிறந்த திகதி : 3.11.1995<br>மதம் : இந்து<br>ஜாதி : V பெண்<br>கல்வி தகைமை: University<br>எதிர்பார்ப்பு : வெளிநாட்டு மணமகன் |
| பிறந்த திகதி: 11.08.1994<br>ஜாதி: P செவ்வாய் குற்றமுடையவர்<br>எதிர்பார்ப்பு : ஒரே குலத்தை சோந்த அழகிய மணமகள் | பிறந்த திகதி : 01.01.1992<br>மதம் : இந்து .<br>ஜாதி : Pபெண்<br>கல்வி தகைமை: NCAT.<br>எதிர்பார்ப்பு : உள்ளூர் அரச சேவை மணமகன் |
| பிறந்த திகதி: 1981.04.25<br>ஜாதி: V ஆண்<br>மதம் : இந்து<br>கல்வி தகைமை : A/L<br>தொழில்: சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு : ஜரோப்பிய நாட்டு இலங்கை தமிழ் பெண் | பிறந்த திகதி : 17.05.1998<br>மதம் : இந்து .<br>ஜாதி ::P பெண் செவ்வாய் குற்றமுடையவர்<br>கல்வி தகைமை: AL<br>எதிர்பார்ப்பு :உள்நாடு - வெளிநாட்டு மணமகன் |

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சுற்றுலாப் பயணிகளைக் கவர....!

இன்றைய மோசமான பொருளாதார நெருக்கடிக்கான பிரதான காரணங்களில் ஒன்று சுற்றுலாத்துறை வருமானத்தில் ஏற்பட்ட பெரு வீழ்ச்சி ஆகும்.

இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வரை தளம்பல் ஏதுமின்றி ஒழுங்காக விருத்தியடைந்து, வருமானம் தந்து கொண்டிருந்த துறை அது. வனப்புமிக்க இலங்கை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுத்தமையில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

ஆனால் 2019 இல் நடந்த உயிர்த்த ஞாயிறுத் தொடர் குண்டுத் தாக்குதலுடன் அத்துறைக்கு விழுந்த அடியிலிருந்து அது இன்னமும் மீளவே இல்லை.

அந்தத் தாக்குதலில் அப்பாவிச் சுற்றுலாப் பயணிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். டசின் கணக்கான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் – அப்பாவிகள் – அதனால் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்து இன்னமும் அவற்றின் அவலங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

அந்த அடியிலிருந்து சுற்றுலாத்துறை இன்னமும் சரியாக மீளவே இல்லை. இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பில் சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கு நம்பகத்தன்மையை மீளக் கட்டியெழுப்பி, அத்துறையை மேம்படுத்த தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டனவாயினும், அதற்கிடையில் கொரோனாப் பேரிடர் சர்வதேசத்தையும் தாக்கி நிலைமையைச் சீரழித்தது.

அந்தப் பேரிடர்களில் இருந்து ஒருவாறு எழுந்து சுற்றுலாத்துறை மீளக் காலூன்றுவதற்கிடையில் நாட்டின் பொருளாதார நெருக்கடி, அரசியல் குழப்பம், அதையொட்டிய வன்முறைகள் போன்றவை மீண்டும் நேரடியாய்த் தாக்கி நிலைமையைத் திரும்பவும் மோசமடைய வைத்திருக்கின்றன.

சுற்றுலாப் பயண துறை அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் வளம் மிகுந்த வர்த்தகம். அதை இழந்தமை நாட்டின் பொருளாதார பின்னடைவிற்குப் பெரும் இக்கட்டு.

அதனால் அதனை மீண்டும் கட்டியெழுப்பி, வருவாயைத் தேட புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சுற்றுலாத் துறைக்கான அவரின் புதிய அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவும் துடியாய்த் துடிக்கின்றனர்.

பொருளாதார நெருக்கடி மற்றும் வன்முறைகளை அடுத்து பிரிட்டிஷ் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று பிரிட்டன் பயண வழிகாட்டி அறிவுறுத்தல் வழங்கியது. அதனால் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் வரை அதிக சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அனுப்பிய பிரிட்டன், அந்த வரிசையில் இருந்து 2 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டது. கடந்த மாதம் இந்தியாவிலிருந்தே அதிக எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

பல்லாயிரம் சுற்றுலாப் பயணிகளை இந்தியாவிலிருந்து கவர்ந்திழுக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகம் இருப்பதை பிரதமர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அதிக பிரச்சாரங்கள், ஆரவாரங்கள், செலவுகள் இன்றியே சுலபமாக கவரக்கூடிய சுற்றுலா பயணிகளுக்கான சந்தையாக இன்று இலங்கைக்கு இந்தியாவே உள்ளது.

அதைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக அந்நிய செலாவணியை ஈட்டவும், இந்தியக் கடன் தொகைகளை விரைந்து மீளச் செலுத்தவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இந்தியப் பயணிகளை –குறிப்பாகத் தமிழகச் சுற்றுலாப் பயணிகளை – கவர்வதற்கு தமிழகத்திற்கு பக்கத்திலுள்ள பலாலி சர்வதேச விமான நிலையத்தை உடனடியாக மீளத் திறப்பதும், அதற்கான விமானக் கட்டணங்களை நீதியான முறையில் ஒழுங்குபடுத்தி சீர் செய்வதும், உடனடியாக செய்யப்பட வேண்டும்.



# மொட்டில் இருந்து யானைக்கு தாவும் சில அரசியல் கட்சிகள்!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்பட்ட பல அரசியல் கட்சிகள் எதிர்கால அரசியல் நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்படத் தீர்மானித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் மேற்படி கட்சிகளின் தலைவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அதன்படி, இலங்கை மக்கள் உள்ளூராட்சிக் கட்சியின் பொதுச் செயலாளர் எஸ்.விஷ்ணுகாந்தன், தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் துஸ்யந்த், ஸ்ரீரெலோவின் ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் பி.உதயராசா. ஜனநாயக மக்கள் காங்கிரஸ் சார்பில் அதன் பிரதித் தலைவர் கலாநிதி என்.குமாரகுருபரன், ஐக்கிய காங்கிரஸ் கட்சி சார்பில் அதன் தலைவர் ஏ.எம்.முபாரக், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் நாயகம் இ.தம்பையா உள்ளிட்ட பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

மேற்குறிப்பிட்ட கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் ஒன்றிணைந்த மற்றும் நாடு சார்ந்த அரசியல் செயற்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தினர். பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கு தமது பூரண ஆதரவை வழங்குவதற்கும் அவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

அடுத்த இரண்டு வாரங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் விரிவான கலந்துரையாடல்களை நடத்துவதற்கும் பின்னர் பரந்த மற்றும் ஜனரஞ்சகமான அரசியல் முன்னெடுப்பில் இறங்குவதற்கும் அவர்கள் இதன்போது ஒப்புக்கொண்டனர்.

# கனிய மணல் அகழ்வு: விசேட நடவடிக்கை தேவை

## செல்வம் எம்.பி. வலியுறுத்து



மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கனிய மணல் அகழ்வு தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெலிற்கு அவசர கடிதம் ஒன்றையும் நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

மன்னார் மாவட்டத்தில் முறையற்ற விதத்தில் இல்மனைட் கனிம வள மண் அகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன எனவும் மன்னார் மாவட்ட மக்கள் மத்தியில் இல்மனைட் மணல் அகழ்வுக்கு பாரிய எதிர்ப்புகள் இருந்தும் கூட அதற்கு எந்தத் தடையும் இன்றி கனிம வள மணல் அகழ்வுகள் தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன எனவும் குறிப்பிட்டார்.

எனவே, இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடி சில முடிவுகளை எடுத்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, இதுதொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றுக்கான ஏற்பாடுகளை செய்து தருமாறும், அந்தக் கலந்துரையாடல் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 6 ஆண்டுகளில் 76 யானைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் சாவு





மட்டக்களப்பு மாவட்டத்தில் யானைகளுக்கும் மனிதர்களுக்குமிடையிலான மோதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

கடந்த ஆறு ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் 76 யானைகள் இறந்துள்ளமையுடன், 149 யானைகள் காயமடைந்துள்ளன என மட்டக்களப்பு மாவட்ட காணி விவகாரங்களுக்குப் பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்சனி தெரிவித்தார்.

இக்காலப் பகுதியில் காட்டு யானைகள் 660 சொத்துகளுக்கும் சேதத்தை ஏற்படுத்தியிருக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

செங்கலடி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட, உன்னிச்சை 10ஆம் கட்டை கிராமத்தில் நீண்டகாலமாக இயங்கிவந்த கோழிப் பண்ணை காட்டு யானை தாக்கத்தால் முற்றாக சேதமடைந்தமையால், அந்தப் பண்ணையையே இழுத்து மூடிவிட்டனர்.

மேலும், குறித்த கிராமத்தில் யானைகளின் அட்டகாசம் தொடர்பாக அகில இலங்கை விவாசாயிகள் சம்மேளன மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கே.யோகவேள் விசனம் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உக்ரைன் - ரஷ்யா போர் தீவிரம் முக்கிய பாலங்கள் சில தகர்ப்பு



உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து 4 மாதங்களை தாண்டி விட்டது. ஆனாலும் இன்னும் போர் முடிவுக்கு வந்தபாடில்லை. இருந்தபோதிலும் ரஷ்யாவின் மும்முனை தாக்குதலால் உக்ரைனில் பல நகரங்கள் ரஷ்யா வசம் வீழ்ந்து விட்டன. தற்போது உக்ரைனின் கிழக்கு பகுதியான டான்பாஸ் பிராந்தியத்தை கைப்பற்றும் முயற்சியில் ரஷ்யா தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அங்குள்ள தொழில் நகரமான செவிரோடோ டொனட்ஸ்க்கின் 80 சதவீத பகுதிகளை ரஷ்யா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டது. மீதமுள்ள 20 சதவீத பகுதிகளை பிடிக்க தொடர் தாக்குதலில் ரஷ்யா இறங்கி உள்ளது. அந்த நகரில் உள்ள அசோட் இரசாயன ஆலையில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் தஞ்சம் அடைந்து உள்ளனர். இந்த ஆலை மீது ரஷ்யா படையினர் கடும் தாக்குதலை மேற்கொண்டு உள்ளனர். மேலும் செவிரோடோ டொனட்ஸ்க் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள 3 முக்கிய பாலங்களை ரஷ்யா படையினர் தகர்த்தனர். இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து முற்றிலும் துண்டிக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக உக்ரைன் படையினர் மேலும் முன்னேற முடியாமல் பின்னடைவை சந்தித்து வருகிறார்கள். போர் தொடங்குவதற்கு முன்பு சுமார் 1 லட்சம் பேர் வசித்து வந்த செவிரோடோ டொனட்ஸ்க் நகரில் தற்போது 12 ஆயிரம் பேர் தங்கி உள்ளனர். முக்கிய பாலங்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டு உள்ளதால் அந்த மக்கள் அங்கிருந்து வெளியேற முடியாமல் தவித்து வருகிறார்கள். அவர்களுக்கு அத்தியாவசிய பொருள்கள் கூட கிடைக்க முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளதாக உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். ரஷ்யா படைகள் இறுதி தாக்குதல் நடத்தி வருவதால் அந்த நகரம் இன்னும் ஓரிரு நாளில் வீழ்ந்து விடும் என்ற நிலை உருவாகி உள்ளது. லுஹாமான்ஸ் மாகாணத்தில் உக்ரைன் கட்டுப்பாட்டில் உள்ள கடைசி பெரிய நகரமான செவிரோடோ டொனட்ஸ்க்கை கைப்பற்றி விட்டால் அந்த மாகாணம் முழுவதும் ரஷ்ய படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடும் என கூறப்படுகிறது.

## அலுவலகத்தில் கணினி கோளாறு சுவிட்ஸர்லாந்தின் வான்வெளி மூடல்





விமான போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தில் கணினி கோளாறு ஏற்பட்டதால் சுவிட்ஸர்லாந்து வான்வெளி மூடப்பட்டது. விமான போக்குவரத்தை கட்டுப்படுத்தும் கணினி கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறால் அனைத்து விமானங்களும் தரையிறக்கப்பட்டன. கணினி கோளாறு சரிசெய்யப்பட்ட பிறகே மீண்டும் விமான போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பொலிவுட்டில் நடிக்கும் மலையாள பெண்



பொலிவுட் படங்களில் கேரளாவை சேர்ந்த மலையாள பெண் நடித்து வருகிறார். சமீபத்தில் வெளியான பொலிவுட் படமான ‘ஜுராசிக் வேர்ல்ட் டாமினியன்’ படத்தில் டைனோசர் பூங்காவின் பாதுகாவலராக நடித்திருந்தவர் வரதா சேது. இவர் அமெரிக்காவில் வாழும் மலையாள பெண். பொலிவுட்டில் தயாரான ‘நவ் யூ சீ மீ 2’ படத்தில் இவர் முக்கிய வேடத்தில் நடித்திருக்கிறார். விண்வெளி புனைகதை தொடரான ‘ஸ்டார் வார்ஸ்’ படத்திலும் முக்கிய கேரக்டரில் நடித்திருந்தார். தற்போது பொலிவுட் வெப் தொடர்களில் நடித்து வருகிறார். முதல்முறையாக மலையாள படத்திலும் நடிக்க இருக்கிறார். பிரமதாவனம் என்ற படத்தின் மூலம் மலையாளத்தில் அறிமுகமாகிறார் வரதா. இந்த படத்தை ஜெயராஜ் இயக்குகிறார். ஷாம் நீல் நாயகனாக நடிக்கிறார். உன்னிமுகுந்தன் முக்கிய கேரக்டரில் நடிக்க, சச்சு சாஜி ஒளிப்பதிவு செய்கிறார், ஸ்ரீனிஷ் இசை அமைக்கிறார்.

‘பெற்றோர் அமெரிக்கா சென்றதும் அங்கேதான் நான் பிறந்தேன், வளர்ந்தேன். விடுமுறையில் கேரளாவுக்கு வருவேன். அப்போது மலையாளம் கற்றுக்கொண்டேன். அமெரிக்காவில் படித்தபோது, தியேட்டர்களில் நடித்தேன். அதன் மூலம் பட வாய்ப்புகளும் கிடைத்தன’ என்றார் வரதா சேது.




### பெண் ஊழியர்களுக்கு ஊதிய பாகுபாடு;

## ரூ.920 கோடி இழப்பீடு வழங்க கூகுள் நிறுவனம் முடிவு

கூகுள் நிறுவனத்தில் பெண் ஊழியர்களுக்கு ஊதிய பாகுபாடு காட்டப்பட்ட புகாரில், 920 கோடி ரூபா இழப்பீடு வழங்க அந்நிறுவனம் முன்வந்துள்ளது. கடந்த 2013ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் கலிபோர்னியாவில் உள்ள கூகுள் நிறுவனத்தில் பணியாற்றிய 15 ஆயிரத்து 500 பெண் ஊழியர்களுக்கு, ஒரே விதமான பதவிகளில் ஆண்களை விட பெண்களுக்கு குறைவான ஊதியமே வழங்கியதாகவும், அவர்களுக்கு தகுதி குறைவான பணிகளே வழங்கப்பட்டதாகவும் புகார் எழுந்தது.

இதுதொடர்பாக 2017ம் ஆண்டு, கூகுள் நிறுவனத்தின் முன்னாள் பெண் ஊழியர்கள் 3 பேர் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கில் கூகுள் நிறுவனம், பாதிக்கப்பட்ட பெண் ஊழியர்களுக்கு 11.8 கோடி டொலர் இழப்பீட்டை வழங்குவதாக அறிவித்துள்ளது. இது இந்திய மதிப்பில் 920 கோடி ரூபாவாகும். பாலின பாகுபாட்டிற்காக கூகுள் நிறுவனம் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவது இது முதல் முறை அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு பெண்கள் மற்றும் ஆசிய கண்டத்தை சேர்ந்தவர்கள் மீது பாகுபாடு காட்டியதாக 38 லட்சம் டொலர்கள் அபராத தொகையை கூகுள் அமெரிக்க தொழிலாளர் துறைக்கு செலுத்த ஒப்புக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது.



## எரிபொருள் இறக்குமதியில் உக்ரைனை ஏமாற்றிய பிரான்ஸ்

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு 4 மாதங்களாக நடைபெற்று வருகிறது. இந்த போருக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது பொருளாதார தடைகளை விதித்தன. இருப்பினும் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் எரிபொருளுக்கு ரஷ்யாவையே நம்பி இருக்க வேண்டியதாக உள்ளன.

ஆனாலும் இந்த ஆண்டுக்குள் ரஷ்யாவிடம் இருந்து பெறப்படும் எரிபொருள் இறக்குமதி முற்றிலுமாக குறைக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்தது. இருப்பினும் ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த பிரான்ஸ், ரஷ்யாவிடம் இருந்து குறைந்த விலையில் எரிபொருள் இறக்குமதி செய்வதை அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது. கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மட்டும் ரூ.7,200 கோடி மதிப்பிலான எரிபொருள்களை பிரான்ஸ் இறக்குமதி செய்துள்ளதாக கூறப்படுகிறது. இதையடுத்து உக்ரைனை பிரான்ஸ் ஏமாற்றிவிட்டது என பலரும் விமர்சனம் செய்து வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆதித்யா தாக்கரேயைத் தடுத்து நிறுத்திய அதிகாரிகள் மகாராஷ்டிராவில் பிரதமர் வரவேற்பில் ஏற்பட்ட சர்ச்சை



மகாராஷ்டிராவுக்கு சென்ற பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்கச் சென்ற அமைச்சரும் முதல்வர் உத்தவ் தாக்கரேயின் மகனுமான ஆதித்யா தாக்கரேயைப் பாதுகாப்பு அதிகாரிகள் தடுத்து நிறுத்தியமையால் பரபரப்பு ஏற்பட்டது.

மகாராஷ்டிராவில் பல்வேறு திட்டங்களைத் தொடக்கி வைப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி நேற்று மாலை அங்கு சென்றார். மும்பையில் உள்ள இந்தியக் கடற்படைத் தளத்தில் ஹெலிக்கொப்டரில் வந்திறங்கிய அவரை, மகாராஷ்டிரா முதல்வர் உத்தவ் தாக்கரே உள்ளிட்ட சில அமைச்சர்கள் வரவேற்கச் சென்றனர். அப்போது அவர்களுடன் மகாராஷ்டிரா சுற்றுச்சூழல் துறை அமைச்சரும் உத்தவ் தாக்கரேயின் மகனுமான ஆதித்யா தாக்கரேயும் சென்றிருந்தார். பிரதமரின் ஹெலிக்கொப்டர் தரையிறங்கியதும் அங்கு வந்த அவரது சிறப்புப் பாதுகாப்புப் படை அதிகாரிகள் வரவேற்க வந்த ஒவ்வொருவரையும் சோதனை செய்து உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தனர்.

அப்பொழுது அங்கு வந்த ஆதித்யா தாக்கரேயை எஸ்.பி.ஜி. அதிகாரிகள் உள்ளே அனுமதிக்க மறுத்து வெளியே நிறுத்தினர். இதனைக் கண்ட முதல்வர் உத்தவ் தாக்கரே எஸ்.பி.ஜி. அதிகாரிகளுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். ஆதித்யா தாக்கரே எனது மகன் என்பதால் அவரை இங்கு அழைத்து வரவில்லை. அவர் ஒரு அமைச்சர். பிரதமரை வரவேற்க அவருக்கு உரிமை இருக்கிறது, என அவர் கூறினார்.

ஆனால், எஸ்.பி.ஜி. அதிகாரிகளோ ஆதித்யாவின் பெயர் வரவேற்புப் பட்டியலில் இல்லாததால்தான் அவரைத் தடுத்து நிறுத்தினோம் எனக் கூறினர். சிறிது நேர வாக்குவாதத்துக்குப் பிறகு ஆதித்யா உள்ளே அனுமதிக்கப்பட்டார். இந்தச் சம்பவத்தால் முதல்வர் உத்தவ் தாக்கரே கடும் அதிருப்தியில் உள்ளார் என கூறப்படுகிறது.

இந்த விவகாரம் குறித்து அமைச்சர் ஆதித்யா தாக்கரேக்கு நெருக்கமான சிலர் கூறுகையில், பிரதமரை வரவேற்கச் செல்பவர்களின் பட்டியலில் ஆதித்யா தாக்கரேயின் பெயர் இல்லை. பிரதமரை ஆதித்யா வரவேற்பது திடீரென எடுக்கப்பட்ட முடிவு. எனவே எஸ்.பி.ஜி. அதிகாரிகள் அவரைத் தடுத்துள்ளனர். விளக்கம் அளிக்கப்பட்ட பிறகு அவர் உள்ளே அனுமதிக்கப்பட்டுவிட்டார். இது மிகச் சாதாரண விடயம்தான். இதனால், ஆதித்யா தாக்கரேக்கு எந்த மன வருத்தமும் இல்லை, எனத் தெரிவித்தனர்.

பா.ஜ.கவுடன் நீண்டகாலமாகக் கூட்டணியில் இருந்த சிவசேனா, 2019 மகாராஷ்டிரா சட்டப்பேரவைத் தேர்தலுக்குப் பிறகு அந்த உறவை முறித்துக் கொண்டது. தற்போது காங்கிரஸ் மற்றும் தேசியவாத காங்கிரஸுடன் கூட்டணி அமைத்து சிவசேனா ஆட்சியில் உள்ளது. பா.ஜ.கவையும், பிரதமர் நரேந்திர மோடியையும் சிவசேனாவும் அதன் தலைவர் உத்தவ் தாக்கரேயும் கடுமையாக விமர்சித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த சிறுவன் 100 மணி நேர முயற்சிக்குப் பின்னர் மீட்பு

ஜாங்கிரி–ம்பா மாவட்டம், பிஹ்ரிட் கிராமத்தைச் சேர்ந்த 10 வயதுச் சிறுவன் ராகுல், கடந்த 10 ஆம் திகதி தனது வீட்டின் அருகேயிருந்த பயனற்ற ஆழ்துளைக் கிணற்றில் தவறி விழுந்தான். இதையடுத்து மீட்புப்பணியில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர் உள்பட பல குழுவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

ஆழ்துளைக் கிணற்றின் அருகே மிகப்பெரிய சுரங்கம் தோண்டப்பட்டது. ஆழ்துளைக் கிணற்றுக்குள் குழாய் வழியாக ஒட்சிசன் அனுப்பப்பட்டது தீவிரமாக நடந்த இந்த மீட்பு பணி 3 நாள்களுக்கு மேல் தொடர்ந்தது. இந்த நிலையில் 100 மணி நேரத்துக்கும் மேலான மீட்பு முயற்சிக்கு பின் ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த சிறுவன் உயிருடன் மீட்கப்பட்டுள்ளான். இது குறித்து சத்தீஸ்கர் முதலமைச்சர் பூபேஷ் பாகல் தனது டுவிட்டர் பதிவில், அனைவரின் பிரார்த்த னையாலும், மீட்புக் குழுவினரின் இடைவிடாத அர்ப்பணிப்பு முயற்சியாலும், ராகுல் சாஹூ பத்திரமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்பதே எங்கள் விருப்பம், என தெரிவித்துள்ளார் .

## அயோத்தி மத்தியஸ்தரின் பாதுகாப்பு நீக்கப்பட்டது ஏன்? தமிழக அரசு பதிலளிக்கவேண்டுமென நீதிமன்றம் உத்தரவு



அயோத்தி ராமர் கோயில் நிலம் தொடர்பான வழக்கில் மத்தியஸ்தராக செயல்பட்ட உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் ஸ்ரீராம் பஞ்சுவுக்கு வழங்கப்பட்ட இசட் பிரிவு பாதுகாப்பு திரும்பப் பெறப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து தொடரப்பட்ட வழக்கில் தமிழக அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அயோத்தியில் ராமர் கோயில் இடம் தொடர்பான வழக்கில் தீர்வு காண்பதற்கான மத்தியஸ்தக் குழுவில் உச்ச நீதிமன்றத்தால் 2019 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டவர் சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஸ்ரீராம் பஞ்சு. அப்போது அவருக்கு இசட் பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இந்த நிலையில் அவருக்கு வழங்கப்பட்ட இசட் பிரிவுப் பாதுகாப்பை தமிழக அரசு சமீபத்தில் திரும்பப் பெற்றுக்கொண்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மூத்த வழக்கறிஞர் ஸ்ரீராம் பஞ்சு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவானது, நீதிபதி என்.சதீஷ்குமார் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெறுகின்றமையால் தனக்கு வழங்கப்பட்ட இசட் பிரிவு பாதுகாப்பை மீண்டும் வழங்க வேண்டும் என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கை ரகசியமான முறையில் விசாரித்தால் அந்த சம்பவங்களை நீதிமன்றத்தில் தெரிவிக்க தான் தயாராக இருக்கிறேன் எனவும் மனுதாரர் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட பின்னர், இந்த மனுவுக்கு பதிலளிக்குமாறு பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார். இந்த வழக்கு விசாரணை ஜூன் 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.



## இந்திய குடியரசுத் தலைவர் தேர்தலில் நிதிஷ் குமார் போட்டியிட மாட்டாராம்

இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தின் பதவிக்காலம் வரும் ஜூலை 24 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. புதிய குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஜூலை 18 ஆம் திகதி நடைபெறும் என இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கிறது.

இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சரத் பவார் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் தனக்கு விருப்பமில்லை என்று புறந்தள்ளிவிட்டார்.

அதேபோல் நிதிஷ் குமாரின் பெயரும் குடியரசுத் தலைவர் தேர்தலில் அடிபட்டது. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட உடனேயே, ஐக்கிய ஜனதா தள கட்சியின் மூத்த தலைவரான ஷ்ரவன் குாார், நாட்டின் குடியரசுத் தலைவராக இருக்கும் அனைத்து தகுதியும் படைத்தவர் நிதிஷ் குமார். அவர் குடியரசுத் தலைவராவதை எல்லோருமே விரும்புவார்கள். ஒரு பிஹாரி குடியரசுத் தலைவராக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவரால் இந்த பொறுப்பை தனது தோள்களில் சுமக்க முடியும், எனக் கூறியிருந்தார். ஆனால், குடியரசுத் தலைவர் தேர்தலில் தான் போட்டியிடக்கூடும் என்று வெளியான தகவலை நிதிஷ் குமார் மறுத்துள்ளார். நான் குடியரசுத் தேர்தல் போட்டியில் இல்லை. நான் பிஹாரைவிட்டு எங்கும் போகப்போவதும் இல்லை. இதுபோன்ற தகவல்கள் எல்லாம் அடிப்படை ஆதாரமற்றவை, என்று அவர் தெரிவித்து ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

## நாளை தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாடு பிரதமர் மோடி தலைமையில் ஆரம்பமாகவுள்ளது

*இமாச்சலப் பிரதேசத்தில் வரும் 16, 17 ஆகிய திகதிகளில் முதலாவது தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாடு பிரதமர் தலைமையில் நடைபெறவுள்ளது. மத்திய - மாநில அரசுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் விதமாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மூன்று நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் மூன்று விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.*

*அதன்படி, தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது, நகர்ப்புற நிர்வாகம், பயிர் மாற்றம் மற்றும் எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகை உணவுப்பொருள்களில் தன்னிறைவை அடைதல், தேசிய கல்விக் கொள்கையின் கீழ் பள்ளி மற்றும் உயர் கல்வி நிலையங்களின் செயல்பாடு ஆகியவை குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படும்.*

*இதுதவிர, மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் சிறப்பாக செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்தும் மாநாட்டில் எடுத்துரைக்கப்படும். வளர்ச்சியடைந்த மாவட்டங்களின் நிர்வாக செயல்பாடுகள் குறித்தும் இதில் விவாதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

# டெங்கு பரவல் வலயமாக சாய்ந்தமருதுப் பிரதேசம்

## அடையாளப்படுத்தப்பட்டுள்ளது



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட சாய்ந்தமருது சுகாதார வைத்தியதிகாரி பிரிவு அதிகமான டெங்கு நுளம்பு பரவும் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

ஒரு மாத காலத்திற்குள் அதிகமான டெங்கு நோயாளர்கள் சாய்ந்தமருது சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும், டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் பொது மக்கள் மிக அவதானமாக செயற்படுமாறும் அவர் கேட்டுள்ளார்.

பொது நிறுவனங்கள் மற்றும் மதஸ்தலங்களில் அதிகமான டெங்கு பரப்பும்நுளம்பின்குடம்பிகள்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும் எதிர்காலத்தில் மிகவும் அபாயமான நிலை ஏற்படுமெனவும் தெரிவித்தார்.

வீடுகள், நீர் கசிவு ஏற்படும் இடங்கள், மலசல கூடங்கள் போன்றவற்றிலும் டெங்கு நுளம்புகளின் குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனவும், கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேசத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமையோடு டெங்கு நோயினால் பலர் இறந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

சில கிராமசேவகர் பிரிவுகள் சிவப்பு எச்சரிக்கை வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும். இதனை மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பு குழுவினர், டெங்கு ஒழிப்பு செயலணி, சமூக மட்ட தலைவர்கள் ஆகியோர் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு செய்து வருகின்றனர்.

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி, டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் சுத்தமாக தமது இடங்களை வைத்து கொள்ள வேண்டும். மேலும், டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான வெற்றுக் காணிகளை வைத்திருப்பவர்கள் இரண்டு வார காலத்திற்குள் அவற்றைத் துப்புரவு செய்ய வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குருதிக் கொடையாளர் தினம் கல்முனையில் அனுஷ்டிப்பு









(காரைதீவு நிருபர் சகா)

உலகக் குருதிக் கொடையாளர் தினம் நேற்று செவ்வாய்க்கிழமை கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

உலக குருதிக் கொடையாளர் தினம் நேற்று ஆகும். கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த 6 வருட காலங்களில் வைத்தியசாலையில் குருதியை தானமாக வழங்கிய சுமார் 100பேர்சான்றிதழ்வழங்கிகௌரவிக்கப்பட்டனர்.

இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூத்ததம்பி கோபாலரத்தினம் கலந்து சிறப்பித்தார்.

அவர் செயலாளராக பதவி உயர்வு பெற்றமையை முன்னிட்டு கௌரவிப்பு நிகழ்வும் அங்கு இடம்பெற்றது. சிறப்பு அதிதிகளாக எகெட் நிறுவன பணிப்பாளர் வண. பிதா ஏ.ஜேசுதாசன், பிரபல தொழிலதிபர் சொர்ணம் கூட்டு நிறுவன பணிப்பாளர் எம்.விஸ்வநாதன், வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய பரிபாலர்கள்மற்றும்பலர்கலந்துகொண்டார்கள்.

# உப்பூரலில் வீசிய கடுங்காற்றில் 38 வீடுகள் பகுதியளவில் சேதம்







(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உப்பூரல் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை வீசிய காற்றினால் 38 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என அனர்த்த முகாமைத்துவநிலையம்தெரிவித்துள்ளது.

உப்பூரல் பிரதேசத்தில் பலத்த மழை பெய்து வந்த போது காற்று மிகவும் வேகமாக வீசியது.

இதனால் 38 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மீனவர்களின் வள்ளங்கள் சில உடைந்துள்ளன எனவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் சேதமடைந்துள்ளது.

பலத்த காற்றுடன் கூடிய மழையினால் ஏற்பட்ட சேத விவரங்களை வெருகல் பிரதேச செயலகம் ஊடாக திரட்டி வருவதாகவும் இதுவரைக்கும் 38 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளமை தெரிய வந்ததாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் திருகோணமலை மாவட்ட உதவிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

அத்துடன் பாதிப்புக்குள்ளானவர்கள் குறித்து தகவல்களை பெற்று மாவட்ட அரசாங்க அதிபரின் ஆலோசனையின் பேரில் வெருகல் பிரதேச செயலாளரின் உதவியுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# கற்பாறைகளுக்குள் கைக்குண்டு மீட்பு!

திருகோணமலை மாவட்டத்தின் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்போகமபகுதியில்கற்பாறைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டு ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர். கந்தளாய் குளத்தை அண்டிய பகுதியில் போடப்பட்டிருந்த கருங் கற்பாறைகளுக்குள்ளிருந்தே இந்தக் கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. அக்போபுர பொலிஸாருக்குக் கிடைத்த தகவலில் அடிப்படையில் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் குண்டு மீட்கப்பட்டது. கந்தளாய் நீதிமன்ற நீதிவானின் உத்தரவின் பேரில் கைக்குண்டினை செயழிலக்கச்செய்வதற்கான ஏற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டன என அக்போபுர பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறுவர்களின் மந்தபோசணைக் குறைபாடுக்கு உடனடித்தீர்வு இன்றேல் பின்னடைவு ஏற்படும்!

## யுனிசெவ் எச்சரிக்கை

இலங்கையில் சிறுவர்களைப் பொறுத்தமட்டில் மந்தபோசணைக் குறைபாடு மிகமுக்கிய அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது.

தற்போது அவர்களுக்குரிய உடனடி உதவிகள் வழங்கப்படாத பட்சத்தில், பின்தங்கிய நிலையிலுள்ள சிறுவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதுடன் பல வருடகாலமாக அடைந்து கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் மீண்டும் பின்னடைவைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பு காணப்படுகிறது என்று யுனிசெவ் அமைப்பு எச்சரித்திருக்கின்றது.

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அடுத்துவரும் 7 மாதங்களில் அதிகரிக்கக்கூடிய சிறுவர்களின் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு 17 லட்சம் சிறுவர்களுக்கு அவசியமான போசணை, சுகாதாரம், தூயகுடிதண்ணீர், கல்வி மற்றும் உளநலசேவை உள்ளிட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு 2 கோடியே 53 லட்சம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்குமாறு கடந்த வாரம் யுனிசெவ் அமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் தாம் அறிமுகப்படுத்தவுள்ள சிறுவர்களை முன்னிறுத்திய மனிதாபிமான உதவிச்செயற்திட்டம் தொடர்பில் தெளிவுபடுத்தி தமது அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கிறிஸ்டியன் ஸ்கூக் சார்பில் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே யுனிசெவ் அமைப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

இலங்கை பல தசாப்த காலத்தின் பின்னர் இப்போது மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது. பெற்றோர்கள் வீடுகளிலுள்ள தமது பிள்ளைகள் தொடர்பில் கவலையடைந்தவாறு எரிபொருள், எரிவாயு, மண்ணெண்ணெய் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்காகப் பல மணித்தியாலங்களை நீண்டவரிசைகளில் செலவிடுகின்றார்கள்.

மின்வெட்டு தொடரும் நிலையில், சிறுவர்கள் மெழுகுவர்த்தி ஒளியில் தமது கற்றல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிக்கல்களை எதிர்கொண்டிருக்கின்றார்கள்.

பல்பொருள் அங்காடிகள் வெறுமையடைந்திருப்பதுடன் (பொருள்களுக்கான தட்டுப்பாட்டின் காரணமாக) அரிசி, பால்மா, சமையல் எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்வடைந்துசெல்கின்றன. இவற்றின் காரணமாக சிறுவர்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

எமது அமைப்பின் மதிப்பீட்டின் பிரகாரம் இலங்கையில் 23 லட்சம் சிறுவர்கள், அதாவது இரண்டுக்கு ஒன்று விகிதத்திலான சிறுவர்கள் போசணை, சுகாதாரம், தூயகுடிதண்ணீர், கல்வி, உளவளசேவை உள்ளிட்ட ஏதேனுமொரு வகையிலான அவசர உதவி தேவைப்படும் நிலையில் உள்ளனர். எனவே இந்த விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், சிறுவர்கள் மீதான மோசமான பின்விளைவுகளுடன் இந்த நிலைவரம் மேலும் மோசமடையும்.

சிறுவர்களைப் பொறுத்தமட்டில் மந்தபோசணை முக்கிய அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது. பெருமளவான சிறுவர்கள் பசியுடனேயே உறங்கச்செல்கின்றார்கள். இது ஏற்கனவே தெற்காசியாவில் 5 வயதுக்குக் குறைந்த சிறுவர்களில் மந்தபோசணையுடையோரின் எண்ணிக்கையை உயர்வாகக் கொண்டிருந்த நாடாகக் காணப்பட்ட இலங்கை மேலும் பாதிப்படைவதற்கு வழிவகுக்கும்.

சுமார் 48 லட்சம் சிறுவர்களின் கல்வி சமநிலையில் காணப்படுகின்றது. தற்போதைய சூழ்நிலையில் குறிப்பாக குறைந்த வருமானம் பெறுவோர் வசிக்கும் பகுதிகளில் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களின் வீதம் குறிப்பிடத்தக்களவால் வீழ்ச்சியடைந்திருப்பதாக எமது அமைப்பைச் சார்ந்த குழு அறிக்கையிட்டுள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்கான போக்குவரத்துச்சேவையின் கிடைப்பனவில் ஏற்பட்டுள்ள சிக்கல், மின்வெட்டு, கற்றல் உபகரணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமையின்மை என்பனவே இதற்கான முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. இதனால் பிற்படுத்தப்பட்ட பெருமளவான சிறுவர்கள் போசணைமிக்க உணவைப் பெற்றுக்கொள்ளும் ஒரேயொரு மார்க்கமாகக் காணப்பட்ட பாடசாலை உணவு வழங்கல் செயற்திட்டமும் பாதிப்படைந்துள்ளது.

மேலும் அவசர சிகிச்சைப்பிரிவிலும், உயிர்காக்கும் சத்திரசிகிச்சைகளின் போதும் பயன்படுத்தப்படும் மருந்து உள்ளடங்கலாக சிறுவர்களுக்கும், கர்ப்பிணிப்பெண்களுக்கும் அவசியமான சுமார் 25 இற்கும் மேற்பட்ட அத்தியாவசிய மருந்துப்பொருள்கள் அடுத்த 2 மாதங்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதுமாத்திரமன்றி, இந்த நெருக்கடி பாதுகாப்புடன் தொடர்புடைய தீவிர கரிசனைகளையும் தோற்றுவித்திருக்கின்றது. இலங்கையில் தற்போது 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் ஏதேனுமொரு கட்டமைப்பின் கண்காணிப்பின்கீழ் இருப்பதுடன், அதற்குப் பிரதான காரணம் வறுமையாகும்.

அங்கு குடும்பத்தின் அரவணைப்புக் கிட்டாது என்பதால், அவை சிறுவர்களின் வளர்ச்சிக்குஏற்ற இடமல்ல. அவ்வாறிருக்கையில் தற்போதைய சூழ்நிலையில் அந்தச் சிறுவர்களின் நிலை மேலும் மோசமடைவதுடன், அவர்களுக்குரிய உணவு மற்றும் கல்வித்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான இயலுமையை அந்தக் கட்டமைப்புக்கள் கொண்டிராத நிலை காணப்படுகின்றது.

நாம் இப்போது காலத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றோம். உடனடி உதவிகள் வழங்கப்படாத பட்சத்தில், பின்தங்கிய நிலையிலுள்ள சிறுவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள் என்பதுடன் பல வருடகாலமாக அடைந்துகொள்ளப்பட்ட முன்னேற்றம் மீண்டும்பின்னடைவைச்சந்திக்கக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரச ஊழியர்கள் தடையின்றி வெளிநாடு செல்ல அனுமதி!

### வழங்கியது அமைச்சரவை

அரச ஊழியர்கள் தடையின்றி வெளிநாடு செல்வதற்கு ஏதுவாக தற்போதுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை திருத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, தற்போது படிப்பு அல்லது வேலை வாய்ப்புக்காக அரசு ஊழியர்கள் அதிகபட்சமாக 5 ஆண்டுகள் தங்கள் பதவிக்காலத்தில் வெளிநாடு செல்ல முடியும்.

இத்திருத்தத்தின் கீழ், தற்போதுள்ள விதிகள் திருத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட ஊழியரின் ஓய்வூதியக் கணக்கீடு உள்ளிட்டவற்றை பாதிக்கும் விதிகள் தளர்த்தப்படும். அத்தகைய திருத்தப்பட்ட விதிகள் அடங்கிய சுற்றறிக்கையை விரைவாக வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## ஹர்ஷ டி சில்வா முன்வைத்த குற்றச்சாட்டை மறுத்தார் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி

நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவின் குற்றச்சாட்டை மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் மறுத்துள்ளார்.

பல நாடுகள் இலங்கைக்கு உதவ தயாராக இருக்கின்றன எனவும் அதற்கான உதவிகள் கிடைக்கும் என்று தான் நம்புகிறேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தானும் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியும் கருத்துகளை பரிமாறிக்கொண்டோம் எனவும் இலங்கைக்கு உரிய திட்டங்கள் இல்லாததால் உலக நாடுகள் உதவிக்கு வர தயங்குகின்றன என மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார் என அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நுவரெலியாவில் நீண்ட வரிசையில் மக்கள் 60 நாள்களின் பின் லாப்காஸ் விநியோகம்!







நாடு பூராகவும் தட்டுப்பாடாக இருக்கின்ற லாப்காஸ் எரிவாயு சிலிண்டர்கள் பொலிஸாரின் பாதுகாப்பிற்கு மத்தியில் நுவரெலியா மக்களுக்கு சீராக வழங்கப்பட்டு வருகின்றது. பொதுமக்கள் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாலை 4 மணியில் இருந்து நீண்ட வரிசையில் நின்று பெற்றுச் சென்றனர்.

இரு மாதங்களுக்கு மேலாக லாப்காஸ் எரிவாயு வழங்கப்படாத நிலையில் நுவரெலியா மின்சார சபை கட்டடத்திற்கு முன்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) விநியோகம் இடம்பெற்றது. லாப்கேஸ் எரிவாயு விநியோக மொத்த விற்பனை முகவர்களால் எடுத்து வரப்பட்ட சுமார் 1,150 சிலிண்டர்கள் கடும் நெருக்கடிக்கு மத்தியில் நுவரெலியா, பொரலாந்த, கந்தபளை, மாகஸ்தோட்டம், நானுஓயா உள்ளிட்ட பல பகுதிகளிலிருந்து வருகை தந்த பொதுமக்களுக்கு பொலிஸாரின் மேற்பார்வையில் வழங்கப்பட்டது. எனினும் அனைத்து வாடிக்கையாளர்க ளினதும் தேவைக்கு ஏற்ப சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இதன் போது நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் தொழில் புரிவோருக்கு வழங்கப்பட்டமையால் சமையல் எரிவாயுவை கொள்வனவு செய்யக் காத்திருந்த சிலருக்கு அது கிடைக்காமையால் அமைதியின்மை நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.06.2022இல் வெளியிடப்பெற்றது.